

**சக்தி பௌண்டேஷன் - Uni5 EDUCATION**

**பாடம் - 5 -**

## ஸ்ரீமதி செல்லம்மாள் பாரதி

**photo: Taken in Pondichery in 1919.**

* பள்ளி மாணவர்களைக் கருத்தில் கொண்டு மஹானின் வாழ்க்கை வரலாறு இங்கே மீட்டுருவாக்கம் செய்யப்பட்டு அளிக்கப்படுகின்றது. இப்பாடத்தை நடத்தும் பெற்றோரும் ஆசிரியரும் பாரதியாரின் பாடல்களை இடையில் பாடினால் நலம்! மிகவும் உணர்ச்சியுடனும் சமயோசித புத்தியுடனும் இப்பாடத்தை உள்வாங்கிக் கொண்டு பாரதியாரின் வாழ்க்கையில் நாம் எங்கு நிற்கின்றோம் என்பதை மாணவர்கள் self-identification செய்து கொள்ளுதல் பலன் தரும்! மாணவர்களின் எதார்த்த வாழ்வியல் உதாரணங்களுடன் இணைத்து விளக்கம் தருக.
ஆசிரியர்கள்.

ஒரு மஹாகவிக்கு மனைவியாக வர வேண்டும் என்ற மிக உயர்ந்த சங்கல்பம், வ்ரதம், பூஜைகள் செய்ததன் பலனே செல்லம்மாளை பாரதியாரின் தர்மபத்தினி ஆக்கியது.

மிகச் சிறிய வயதில் குழந்தைக் கல்யாணம் மூலம் இவர் பாரதியாரின் துணைவி ஆனவர்.வயதுக்கு வந்து வாழ்க்கையைப் புரிந்து கொள்ளும் பக்குவம் வரும் வரைத் தன் வீட்டிலேயே அக்கால முறைப்படி வாழ்ந்தார்.

கொடுத்து வைத்த மங்கை

காசிக்குச் செல்லும் முன், "என் அருமை மனைவிக்குத் தமிழில் - ஆங்கிலத்தில் நன்கு எழுதவும் படிக்கவும் கற்றுத் தருக!" என்று தன் வீட்டிலேயே பெண் மறுமலர்ச்சிக்கு பாரதியார் இவர் மூலம் அடிக்கல் போட்டார்.

எட்டயபுர ராஜாவுடன் காசியில் இருந்து மீண்டு வந்த தன் கணவன் மூலம் சராசரி பாரதப் பெண்ணுக்குக் கிடைக்கும் இல்லற போக சுகம் தனக்கும் கிடைக்கும் என்ற மனக்கோட்டை கட்டியவர் இவர்.

பய பத்தினி

பாரதியார் காசியில் வாழும் போது BMIAC நிலைகளில் பல மாற்றங்களை மேற்கொண்டார். அதைப் பற்றி அறியாமையால் பயந்தனர் அவர் குடும்பத்தினர்.

அதைப் பற்றி பாரதியாரின் மைத்துனரே செல்லம்மாவுக்கு எடுத்து கூறி எச்சரிக்கையும் செய்தார். இதை அறிந்த செல்லம்மாள் பயந்து போய் தன் கணவருக்கு ஒரு கடிதம் எழுதினார்.

கேட்ட வரம் மறந்து போன அம்மாளு...
ஆனால் தன் கணவன் பிற சாதாரண ஆண்மக்கள் போல இல்லை என்ற உண்மையை இவரது self-ego ஏற்றுக் கொள்ள பல காலம் ஆனது. அதுவரைப் போராட்டம் தான். காரணம் இவருடன் வந்தால் இப்படித் தான் இருக்கும் என்ற பூர்வ ஜென்ம விழிப்புணர்வு ஞானத்தில் மறைந்தது! இதையே தான் ஸ்ரீராகவேந்த்ர ஸ்வாமிகளின் மனைவியிடத்தும், ஸ்ரீமத் ராமானுஜரின் மனைவியிடத்தும் பார்க்கிறோம்.அவர்களைப் போல் இன்றி பாரதியார் கடைசி வரை இவருடன் இல்லறம் செய்தார். தன்னுடன் வந்த பலனுக்காக விழிப்புணர்வு ஏற்படுத்த முயற்சித்தார். அதில் எண்ணற்ற கஷ்ட நஷ்டங்கள் வந்தன!

தன் குடும்பத்தில் குறிப்பாகத் தன் இரு பெண்களின் வளர்ச்சியிலும் அவர்தம் கல்யாணத்திலும் குறிப்பாக இருந்த இவரும் ஒரு கர்ம யோகியே! அதன் காரணமாகவே ஒரு கட்டத்தில் தன் கணவனை விடுத்துத் தன் குடும்ப நபர்களின் கூட்டுமுயற்சியை அண்டி வாழ நேரிட்டது.

என்ன தான் பாரதியார் இவரை சக்தியாகவே கருதினும் அவரது முற்போக்குச் சிந்தனைகள் செய்கைகள் ஆன்மீகப் பயிற்சிகள் இவருக்குள் எந்த அளவு மாற்றங்களை ஏற்படுத்தின என்பது அவருக்கே வெளிச்சம்!ஆனால் பல கட்டங்களில் அம்மையாரின் செயல்கள் பாரதியை உயர்த்துகின்றன.

தன் கணவனின் குணத்துக்கும் அதை எதிர்க்கும் சமூஹத்தின் சக்திக்கும் இடையில் செல்லம்மாள் தவித்தார் என்பதே உண்மை. அவருள் இருந்த போராட்டம் பல.சாதி, சமூஹ அமைப்பு, குடும்பச்சூழல், பெண்களின் ஆரோக்ய வாழ்வு என அவர் எதிர்கொண்ட போராட்டம் பல!எங்கே தன் கணவனின் போக்கு மகள்களின் எதிர்கால இல்லற வாழ்விற்கு ஏதும் கேடு செய்யக் கூடுமோ என்று சதா வருந்தினார்.தன் கணவனை முழுமையாகப் புரிந்து கொண்ட அவரால் அவரது பல செயல்பாடுகளை ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

மிகச்சிறிய வயதில் தன் கணவனை இழந்து ஒரு விதவைத் தாயாய் அவர் குடும்பத்தை அண்டி வாழ்ந்த கஷ்டங்களை யாரும் மறுக்க முடியாது! ஒரு மஹாகவியின் மனைவி என்ற உயர்ந்த நிலையைத் தவிர இகபர சுக போக வாழ்க்கை இவருக்கு ஏற்படவில்லை!ஆனால் பாரதியாரின் அன்பும், நேசமும்,

மரியாதையும் இவருக்கு வரப்ரசாதமே! அக்காலத்தில் அவை எத்தனை பெண்களுக்குக் கிடைத்தது? பாரதியின் வாழ்க்கை ஏற்றுக் கொண்ட இவருக்கும் இவர் பெண்களுக்கும் எதிர்காலம் மிகவும் நன்றாகவே அமைந்தது.

அல்ப ஆயுளில் சாகும் கணவன், அவனைப் பற்றி சமூஹமும் தன் சாதியும் தன் ஊரும் பேசும் அவப்பேச்சும், பெண்களின் எதிர்காலமும் செல்லம்மாள் சந்தித்த பாரதப்போர்க்களம் என்பதில் ஐயமே இல்லை!

இறந்த கணவனின் உடலை எடுக்கக் கூட ஆட்கள் இல்லை, பணம் இல்லை. இவரது நிலையை எண்ணிப்பாருங்கள்! பணம்-புகழ்-பட்டத்தில் உழலும் இக்காலக் கலைஞர்கள் அவர்தம் குடும்பத்தையும் சற்று எண்ணிப் பாருங்கள்.

அவரது வாழ்க்கையில் இருந்து அவரது உயர்ந்த பண்பினை விளக்கும் சில நிகழ்ச்சிகளைப் பகிர்ந்து கொள்கிறோம்.

1. Associates of Bharathiyar - part 8 பகுதியில் ஸ்ரீசுரேந்த்ரநாத் ஆர்யா அவர்கள் மீது அம்மையார் வைத்திருந்த அன்பு, மரியாதை, தாய்மை உணர்வு ஆகியவற்றைப் பகிர்ந்து கொள்கிறோம்.

2.ஹிந்து மதத்தில் குறிப்பாக ப்ராஹ்மணர் தம் பூஜைகள், புனஸ்காரங்கள், வ்ரதங்கள் ஆகியவற்றை அவர் மிகவும் ஸ்ரத்தையுடன் கடைப்பிடித்தார். தன் வீடும் கணவனும் நல்ல நிலையில் இருக்கும் எண்ணமும் சங்கல்பமுமே அவற்றுள் மேலோங்கியதாக இருக்கும். அவை ஆசீர்வதிக்கப்பட்டும் விட்டன அன்றோ? எனவே வீட்டின் குலஸ்த்ரீ செய்யும் பூஜையும் ப்ரார்த்தனையும் மஹா வலிமை கொண்டவை.

3.ஒரு முறை நவராத்ரியின் போது பாரதியார் 50 ஹரிஜனங்களுக்கு சமைத்து விருந்து வைக்கச் சொன்னார். அம்மையாரும் அதை ஏற்றுக் கொண்டு செய்தார். அனைவரும் சென்ற பின் பாரதியார் மிகவும் மகிழ்ந்து அவருக்கு நன்றி சொல்ல, ***"நானும் நன்றி கூறுகிறேன், என்னையும் அவர்களுடன் அமர்ந்து சாப்பிடச் சொல்லாததற்கும், இடத்தை சுத்தம் செய் என்று சொல்லாததற்கும்***" என்றாரே பார்க்கலாம். இது அவரது மாறுதலின் ப்ரதிபலிப்பே!

4.ஒரு கட்டத்தில் தன் கணவனை எதிர்த்துப் பேசுவதையும் அவருடன் கொள்கை விவாதம் செய்வதையும் நிறுத்துகின்றார்.

5. தன் குடும்ப நலனில் அக்கறை கொண்டு உதவியர்களை இவர் மதித்தார். எக்காலத்தும் எந்த நேரத்திலும் தன் கணவனை அண்டி வந்த எவரையும் மதித்தார். சிலகாலம் தன் குடும்பத்துடன் தங்கி மருத்துவம் செய்து கொள்ள அவர் ஒரு சித்த ப்ரம்மை வ்யாதி கண்ட ஒன்பது வயதுச் சிறுவனுக்கு இடம் கொடுத்து ஆதரித்தார். அதற்கு மேல் தமக்கும் தன் மகள்களுக்கும் உள்ள சிறிய உணவை வந்தவர்க்கும் அளித்தார். இல்லறப் பண்புளை இயன்றவரை எதார்த்த வாழ்விலும் எடுத்து விளக்கியவர் இவர்.

6.வள்ளலாரின் அஹிம்சைக் கொள்கையை உணர்ந்து, ஒரே நாளில் பட்டு ஆடைகள் வேண்டாம் என்று பாரதியார் ஒதுக்கச் சொன்ன போது பட்டையும் வெறுத்த பாரதப்பெண்மணி இவர்.

7.தன் கணவனின் உயர்ந்த ஆன்மீகப் பயிற்சிகளையும் சாதனைகளையும் உணர்ந்தவர் இவர். ஒரு போதும் எவ்விதத்திலும் அதை அவர் குறுக்கிடவே இல்லை. தன் எண்ணம்-செயல் அனைத்தையும் பெண்களின் எதிர்காலத்தில் செலுத்தினார்.

8.இத்தனைக்கும் மத்தியில் வறுமை கோர தாண்டவம் ஆடிய சூழலிலும் பாரதியாரும் செல்லம்மாளும் ஆத்மார்த்த அன்பையும் வாழ்வியலின் உற்சாகத்தையும் விட்டுக் கொடுக்கவில்லை.இவர்கள் குடும்பத்தின் குதூகலத்தைப் பலரும் ரசித்தும் புகழ்ந்தும் வியந்தும் உள்ளனர்.

9.அக்காலச் சமூஹத்தில் ஸ்ரீமதி செல்லம்மாளின் கைகளைப் பிடித்துக் கொண்டு பாரதியார் தெருக்களில் சென்ற அனுபவம் எத்தனை அந்தணப் பெண்களுக்குத் தம் கணவன் மூலம் கிடைத்ததோ?

10. தன் கணவனைப் பற்றி அவதூறு பேசும் மக்கள், சொந்தக்காரர்களின் வாயை அடைக்க அவர் என்ன பாடுபட்டாரோ?

11.தன் மூத்தமகளுக்குத் தன் சொந்தக்காரர்களின் உதவியுடன் கணவனின் அனுமதி பெறாமலே கல்யாணம் பேசிய போது அவருள் ஏற்பட்ட மனப்போராட்டம் பயங்கரம் அல்லவா? ஒரு மனைவி தன் கணவனை அங்கீகாரம் செய்யாத அச்செயலை அவர் எண்ணி எண்ணி அழுதிருக்கிறார்.

13. பாரதியாரின் எழுத்துக்களை, பாடல்களை இவர் ரசித்தார். அவரது வேலை மாற்றங்களை ஏற்றார். தன் கணவன் ஒரு மஹாகவி என்பதில் இவருக்குள்

பெருமை இருந்தது.

14.ஒரு முறை ஒரு கஷ்ட கட்டத்தில் இவரிடத்தில் சொல்லிக் கொள்ளாமல் தன் ஊர் செல்ல நேரிட்டது. மீண்டும் வீடு திரும்பிய இவரை பாரதியார் வரவேற்ற விதமும், சண்டைகளும் மிகவும் வேதனையான செயல்கள்.

15. உடல் நலிவு உற்ற கணவன், போதைக்கு அடிமையானவன், மனதால் அலைக்கழிக்கப் பட்ட நிலைகள் ஸ்ரீமதி செல்லம்மாளுக்கு அதிபயங்கர கட்டங்கள்.

16.சென்னைக்கு 1919ல் மீண்டும் வந்த போது அவருக்கு மதம் மாறிய ஆர்யாவுடன், அவர்தம் வெளிநாட்டு மனைவியுடன் வேப்பேரியில் ஒரே வீட்டில் ஒரே சமையலை உண்ண ஆச்சாரம்-சம்ப்ரதாயம் இடம் கொடுக்கவில்லை. தனியாக மாடியில் சமையல் செய்து கொள்ளும் அளவுக்குப் பழமை வாதம் அவருள் இருப்பதை அவர் கணவன் மிகவும் கண்டித்து இருக்கிறார்.

17. தன் பிற்கால வாழ்க்கையில் அவர் தன் அறியாமைகளை எண்ணி மனம் மாறி இருக்கிறார். அதுவே வேண்டிய மாற்றம் அல்லவா?

திருவல்லிக்கேணி வீட்டுக்குள் அடியேன் செல்லும் போது இவர் நடத்திய குடித்தனம் கண் முன் வருகிறது. அவர் காய் நறுத்திய இடம், பூஜை செய்த இடம், சமைத்த இடம், ஓய்வு கொண்ட இடம், பக்கத்து வீடு, கோயில், வாசலில் இட்ட கோலம் எனக் கண் முன் காட்சிகள் வரும்.அதே சமயம் பாரதியார் உயிர் விட்ட நேரத்தில் அவர் பட்ட பாடும், கையில் ஒற்றைப் பைசா இல்லாமல் அவர் பட்ட கஷ்டமும் மனதில் ரத்தம் சிந்த வைக்கின்றது. அன்று அடியேன் பிறந்து வாழ்ந்து இருப்பின் உதவி இருப்பேனே என்று ஏங்குவேன்.

அப்போது அன்னை சக்தி சொல்வாள்,
"அடே! இப்போது ஏழைப் பெண்களுக்கு உதவு! பாரதியின் புகழை எடுத்து எழுது! அதுவே கைங்கர்யம்!"

எனவே ஸ்ரீமதி செல்லம்மாள் பாரதியின் ஸ்ரீபாதங்களை வணங்கி இக்கட்டுரையைப் பூர்த்தி செய்கிறேன். இக்காலத்தில் ஒரு ப்ரபலத்தின் துணையாக வாழ்பவர்கள் போகத்தில் உழல்கிறார்கள். அக்காலத்தில் உயர்ந்த மக்களின் துணைகள் எப்படி எல்லாம் வாழ்க்கையை எதிர் கொண்டார்கள் என்று வருங்காலம் உணரவே இக்கட்டுரை வழிசெய்யும்!

ஓம் சக்தி!

மதராஸ், செப்டம்பர் - 23, 2012